பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தி –

தொழிலாளர் விரோத த.வெ.க. அரசை கண்டித்து சிவகாசியில் ஆர்ப்பாட்டம்!

விருதுநகர் வடக்கு மாவட்டத்தினருக்கு – முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வேண்டுகோள்!



விருதுநகர், ஆக. 14 -

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

விருதுநகர் மாவட்டத்தின் அச்சாணியாகவும், லட்சக்கணக்கான ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரமாகவும் திகழும் சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் பட்டாசு உற்பத்தி தொழிலை முடக்கும் வகையில், ஆய்வு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் த.வெ.க. அரசின் தொழில் விரோத - தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க வலியுறுத்தியும், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 16.08.2026 - ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.00 மணியளவில் சிவகாசி பேருந்து நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் / நிர்வகாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில்

6 புதிய ரயில் சேவைகள் அறிமுகம்!

மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ரயில்வே அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 14 -

வேலூர் மாவட்டத்தின் ரயில்வே இணைப்பு, பயணிகள் வசதிகள், ரயில் நிலைய உள்கட்டமைப்பு, சரக்கு கையாளும் வசதிகள் மற்றும் கடைசி மைல் இணைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

வேலூர் மாவட்டம் கல்வி, தொழில், மருத்துவம் மற்றும் ஆன்மிகச் சுற்றுலா ஆகியவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டமாக விளங்குவதால், அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு ரயில்வே உள்கட்டமைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் கேட்டறிந்தார்.

மேலும், ரயில் பாதை விரிவாக்கம், சிக்னல் நவீனமயமாக்கல், ரயில் நிலைய மறுசீரமைப்பு மற்றும் கூடுதல் ரயில் சேவைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு: -

வேலூர் மாவட்டத்திற்கு முக்கிய போக்குவரத்து மையமாக காட்பாடி ரயில் நிலையம் விளங்கி வருவதாகவும், வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையமும் மாவட்டத்திற்கு சேவை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

ரூ.1,216 கோடியில் திருப்பதி - காட்பாடி இரட்டைப் பாதை:

திருப்பதி - பாகாலா - காட்பாடி இடையேயான 104 கி.மீ. இரட்டைப் பாதை திட்டம் ரூ.1,216 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார். 2025-26 நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், அரக்கோணம் - காட்பாடி - இருகூர் (கோவை) இடையே 407 கி.மீ. தொலைவுக்கு 3 மற்றும் 4வது ரயில் பாதைகள் அமைப்பதற்கான இறுதி இட ஆய்வு அனுமதிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், காட்பாடி - வேலூர் - விழுப்புரம் இடையே 160 கி.மீ. இரட்டைப் பாதை அமைக்கும் திட்டத்திற்கான இறுதி இட ஆய்வு அனுமதிக்கப்பட்டு, கள ஆய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டத்தில் ரயில்வே சிக்னல் அமைப்புகள் நவீனமயம்:

வேலூர் மாவட்டத்தில் 12 ரயில் நிலையங்களில் மின்னணு இன்டர்லாக்கிங் (Electronic Interlocking) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், 25 ரயில்வே லெவல் கிராசிங்குகளில் பாதுகாப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், 12 ரயில் நிலையங்களில் முழுமையான டிராக் சர்க்யூட்டிங், 13 பிளாக் பிரிவுகளில் ஆக்சில் கவுண்டர்கள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 58 ரூட் கிலோ மீட்டர் தூரத்தில் தானியங்கி பிளாக் சிக்னலிங் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்ரித் பாரத் திட்டத்தில் காட்பாடி, வேலூர் கண்டோன்மென்ட்:

ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் 'அம்ரித் பாரத் ரயில் நிலையத் திட்டத்தின்' கீழ் தமிழகத்தில் 77 ரயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் காட்பாடி சந்திப்பு ரயில் நிலையமும், வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையமும் இடம்பெற்றுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களின் அணுகுமுறைப் பகுதிகள், பயணிகள் காத்திருப்பு அறைகள், கழிப்பறைகள், நடைமேடைகள், நடைமேம்பாலங்கள், லிப்ட்கள், எஸ்கலேட்டர்கள், வாகன நிறுத்துமிடங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், பயணிகள் தகவல் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன.

காட்பாடி ரயில் நிலையத்தில் பல்வேறு பணிகள்:

காட்பாடி சந்திப்பு ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்புப் படை (RPF) குடியிருப்பு / பாரக் மற்றும் ஸ்கவுட் கட்டிடத்தின் கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் மற்றும் பார்சல் அலுவலகத்திற்கான அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையத்தில் நிலையக் கட்டிடம், நுழைவாயில், சுற்றுப் பகுதி, வாகன நிறுத்துமிடம், முன்பதிவு அலுவலகம், காத்திருப்பு அறை, நடைமேடை, நடைமேடை மேற்கூரை, புதிய கழிப்பறை, குடிநீர் வசதி மற்றும் அறிவிப்புப் பலகைகள் உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. லிப்ட் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வேலூர் மாவட்ட பயணிகளுக்கு 6 புதிய ரயில் சேவைகள்:

வேலூர் மாவட்ட மக்களின் ரயில் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில் அண்மையில் 6 புதிய ரயில் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நரசாபூர் - SMVT பெங்களூரு எக்ஸ்பிரஸ் - காட்பாடி, ஜோலார்பேட்டை நிறுத்தங்களுடன்.

சார்லப்பள்ளி - திருச்சிராப்பள்ளி எக்ஸ்பிரஸ் - காட்பாடி, வேலூர் கண்டோன்மென்ட் நிறுத்தங்களுடன்.

நரசாபூர் - திருவண்ணாமலை எக்ஸ்பிரஸ் - காட்பாடி, வேலூர் கண்டோன்மென்ட் நிறுத்தங்களுடன்.

காச்சிகுடா - தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் - காட்பாடி, வேலூர் கண்டோன்மென்ட் நிறுத்தங்களுடன்.

நியூ ஜல்பைகுரி - நாகர்கோவில் அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் - காட்பாடி, ஜோலார்பேட்டை நிறுத்தங்களுடன்.

ஈரோடு - ஜோக்பானி அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் - காட்பாடி, ஜோலார்பேட்டை நிறுத்தங்களுடன்.

மேலும், வேலூர் மாவட்டத்தின் முக்கிய ரயில் நிலையமான காட்பாடி சந்திப்பில் தற்போது 259 ரயில் சேவைகள் இயக்கப்பட்டு வருவதாகவும் ஒன்றிய ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசு தனது தவறை மூடிமறைக்கப் பார்க்காமல்

மாணவர் உயிரைப் பறித்த கொடூரத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

தி.மு.க. ஐ.டி.விங் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.14-

தி.மு.க.ஐ.டி.விங்விடுத்துள்ளசமூகவலைதளப்பதிவுவருமாறு:

போதைப்பொருளுக்கு எதிராக இருப்பது போல் மேடையில் நாடகமாடிவிட்டு, நிஜத்தில் போதைப்பொருளுக்கு எதிராகப் புகார் கொடுத்தால், புகார்அளித்தமாணவரின்தகவலைக்கசியவிட்டுஒரு கும்பலே சேர்ந்து அவருடைய உயிரைப் பறித்துள்ளனர்.

இதற்கெல்லாம் பொறுப்பேற்காமல், பொய்யானதகவல்களைக் கூறி டம்மி தவெக அரசு தன்னுடைய தவறை மூடிமறைக்கப் பார்க்கிறது.

இந்தப் பெற்றோர்களின் அழுகுரல் உங்கள் காதுகளில் கேட்கவில்லையா, முதல்வர் அவர்களே?

உங்கள் நாடகத்தை நிறுத்திவிட்டு இது போன்ற கொடூரத்திற்கு கடும் நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணப்பாறையில் அரசினர் தொழிற்பயிற்சி

கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை!

திருச்சி, ஆக.14-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாவட்ட ஆட்சியரிடம் வைத்துள்ள கோரிக்கை வருமாறு: -

மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் அரசினர் தொழிற்பயிற்சி நிறுவனம் அமைத்திட வேண்டி மணப்பாறை மக்கள் நீண்டநாள் கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் திராவிட மாடல் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து நிதி ஒதுக்கீடு செய்து கடந்த 04.03.2026 அன்று மணப்பாறை வட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், காந்தி நகர் குமரகிரி மலை அடிவாரத்தில் காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள்.

அப்படி அடிக்கல் நாட்டிய தொழிற்பயிற்சி நிறுவனம் தற்காலிகமாக வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஒரு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மாணவர்களின் இடநெருக்கடியை கருத்தில் கொண்டு கட்டுமான பணியினை துரிதப்படுத்தி, விரைவில் தொழிற்பயிற்சி நிறுவனத்தை மாணவர்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வர ஆவண செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் என மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை மனு அளித்துள்ளதாக அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் டிஜிட்டல் –

தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் – ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14 -

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக கிராமப் புறங்கள் மற்றும் தொலைத் தொடர்பு வசதி குறைவாக உள்ள பகுதிகளில், டிஜிட்டல் மற்றும் தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள முக்கிய நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

கடந்த மூன்று ஆண்டுகால காலகட்டத்தில் தமிழ்நாட்டில் அதிவேக பிராட்பேண்ட் இணைய வசதியுடன் இணைக்கப்பட்டுள்ள கிராமங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் அரசு பொது நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள் என்ன?

இதில் தருமபுரி மாவட்டத்தில் பிராட் பேண்ட் இணைய வசதி செய்து தரப்பட்டுள்ள கிராமங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் அரசு பொது நிறுவனங்களின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் மொபைல் நெட்வொர்க் சேவை மற்றும் இணைய வசதியை மேம்படுத்த புதிய தொலைத் தொடர்பு உள்கட்டமைப்புகளை அமைத்துள்ளதா? அவ்வாறு அமைத்திருந்தால், அதன் விவரங்கள் என்ன?

மேம்படுத்தப்பட்ட தொலைத் தொடர்பு இணைப்பின் மூலம் டிஜிட்டல் சேவைகள், மின் ஆளுமை (eGovernance), இணையவழிக் கல்வி மற்றும் தொலை மருத்துவச் சேவைகளை (Telemedicine) தமிழ் நாட்டில் ஊக்குவிக்க எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன?

தருமபுரி மாவட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து கிராமப்புறப் பகுதிகளுக்கும் நம் பகமான, அதிவேக தொலைத் தொடர்பு மற்றும் பிராட்பேண்ட் இணைய சேவைகளை வழங்குவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள கூடுதல் நடவடிக்கைகள் என்ன? என்று தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகரிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.

மாதவிடாய் ஆரோக்கியம் – சுகாதாரம் குறித்த

விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசால் முக்கியத்துவம் அளிக்கப்படுமா?

மாநிலங்களவையில் – எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14-

திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், 11 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில், மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு திட்டங்களுக்கு தேசிய சுகாதார திட்டங் களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறதா? என்றும், சானிட்டரி நாப்கின்ஸ்க்கள் குறைந்த விலையில் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு கிடைக்க தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும், கல்வி நிறுவனங்களிலும், அரசு அலுவலகங்களிலும் இதுகுறித்த விழிப்புணர்வு இயக்கங்கள் நடைபெறுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேலிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு: -

மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மேலாண்மை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்த வேண்டிய திட்டமாகும் என்றும், வளர் இளம் பெண்களுக்கான மாதவிடாய் சுகாதாரத் திட்டம் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், குறைந்த விலையில் தரமான சானிட்டரி நாப்கின்ஸ்கள் பள்ளி மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், பல்வேறு விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படுகிறது என்றும், மாநிலங்களவையில் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும் பல்வேறு தகவல், தொடர்பு சாதனங்களின் உதவியுடனும், கணினி செயலிகள் மூலமாகவும், சுகாதாரப் பணியாளர்களின் வழியாகவும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் பல்வேறு மாநில அரசுகளுடன் இது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட இடைவெளியில் நடந்து வருகிறது என்றும், ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறுவதோடு, திட்ட செயலாக்கம், மற்றும் பெருகிவரும் ஆதரவு குறித்தும் அவ்வப்போது மாநில அரசுகளுடன் விவாதித்து ஒன்றிய அரசு தனது செயல் திட்டங்களை வகுத்து வருகிறது என்றும், பள்ளி மாணவிகளிடத்தில் இதுகுறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப் பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ.கே.ஜெகதீசன்

ஆகஸ்ட் 14 (2020)



கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.

சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் "நச்சுக்கோப்பை" நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.

2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் "நெஞ்சுக்கு நீதி"யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.